www.Padasalai.Net www.CBSEtips.in

12224

12 R

TIRUPPUR DIST

நேரம் : 3.00 மணி

# காலாண்டுத் தேர்வு - 2022

Reg. No. 12224

# தமிழ்

மதிப்பெண்கள் : 90

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14 x 1 = 14

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும்.

1. மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ் – இவ்வடிகளில் பயின்று வரும் தொடை நயம்
அ) அடிமோனை, அடி எதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை இ) அடி எதுகை சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை
2. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்.........
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
3. தமிழில் திணைப்பாகுபாடு...........அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட் குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர் குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு
4. திருக்குறளில் உள்ள இயல்களின் எண்ணிக்கை...........அ) 4 ஆ) 3 இ) 7 ஈ) 9
5. <u>பொய்யா வானம்</u> – கோடிட்ட சொல்லின் இலக்கணக்குறிப்பு ...................
அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர் இ) பண்புத்தொகை ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
6. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) குரங்குகள் | – | 1) கன்றுகளைத் தவிர்த்தன |
| ஆ) விலங்குகள் | – | 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) பறவைகள் | – | 3) குளிரால் நடுங்கின |
| ஈ) பசுக்கள் | – | 4) மேய்ச்சலை மறந்தன |

அ) 1 3 4 2 ஆ) 3 1 4 2 இ) 3 2 1 4 ஈ) 2 1 3 4

7. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஆசிரியர் குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
8. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
9. நெடுநல்வாடையின் ஆசிரியர்........
அ) நக்கீரர் ஆ) கபிலர் இ) குமட்டூர்க் கண்ணனார் ஈ) ஔவையார்
10. சுரதா நடத்திய கவிதை இதழ்..........
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
11. 'குழி மாற்று' – எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்...........
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
12. எட்டுத்தொகை நூல்களுள் அகமும் புறமும் கலந்த நூல்..........
அ) பரிபாடல் ஆ) பதிற்றுப்பத்து இ) புறநானூறு ஈ) கலித்தொகை
13. படிமம் என்பதன் பொருள்...............
அ) சொல் ஆ) செயல் இ) ஒலி ஈ) காட்சி
14. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்..........இத்தொடர் உணர்த்தும் பண்பு.........
அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

## பகுதி - II பிரிவு – 1

ஏதேனும் மூன்றனுக்கு மட்டும் விடைத் தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாடதமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
17. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
18. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டிற்கு மட்டும் பதில் தருக. 2 x 2 = 4

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. சங்க காலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
21. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

### பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு மட்டும் பதில் தருக. 7 x 2 = 14

22. இலக்கணக் குறிப்பு தருக.
அ) மாதவம் ஆ) நுந்தை



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான். அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

24. கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக. அ) Passport ஆ) Visa

25. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : கோவில்

27. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அலை அளை அழை

28. உறுப்பிலக்கணம் தருக :– (ஒன்று மட்டும்) அ) வந்து ஆ) பொலிந்தான்

29. புணர்ச்சி விதி தருக. (ஒன்று மட்டும்) அ) வானமெல்லாம் ஆ) ஆங்கவற்றுள்

30. திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

## பகுதி - III பிரிவு – 1

**எவையேனும் இரண்டிற்கு மட்டும் பதில் தருக.** **2 x 4 = 8**

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

34. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? – குறள் வழி விளக்குக.

## பிரிவு – 2

**ஏதேனும் இரண்டிற்கு விடை தருக.** **2 x 4 = 8**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்குக.

36. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.

37. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்குக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?

## பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

39. பொருள் வேற்றுமையணி அல்லது உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

40. வாகைதிணை அல்லது பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக :

பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வராதப்பா !
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார் !
தின்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்.
– கவிமணி தேசிகவிநாயகம்

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
யானைக்கும் அடி சறுக்கும் அல்லது எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

43. தமிழாக்கம் தருக.
அ) A new language is a new life.
ஆ) Learning is a treasure that will follow its owner everywhere.

## பகுதி - IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** **3 x 6 = 18**

44. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை விளக்குக. **(அல்லது)**
தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

45. நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக. **(அல்லது)**
பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்.... தொடர்ந்து எழுதி முடிக்க. **(அல்லது)**
'சாலை விபத்தில்லா தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டுவன யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** **4 + 2 = 6**

47. அ) குகனோடும் ஐவர்... எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
ஆ) '....படும்' – என முடியும் திருக்குறள்.



Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593